இந்தியா உள்ளிட்ட நாடுகள் மீது டிரம்ப் விதித்த

# 10% புதிய வரி சட்டவிரோதம்!

## அமெரிக்க வர்த்தக நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு!

வாஷிங்டன், மே.10- இந்தியா உள்ளிட்ட நாடுகள் மீது டிரம்ப் விதித்த 10 சதவீத புதிய வரி சட்டவிரோதம் என அமெரிக்க வர்த்தக நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு வழங்கி உள்ளது.

அமெரிக்க அதிபராக கடந்த ஆண்டு டிரம்ப் பொறுப்பேற்றார். அதன்பிறகு அந்நாட்டின் குடியேற்ற கொள்கையில் திருத்தம், மானியம் ரத்து என பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டார். தனது பேச்சை கேட்காத உலக நாடுகள் மீது அதிக வரி விதிப்பதாக அச்சுறுத்தல் விடுத்த அவர், சீனா, கனடா, மெக்சிகோ, இந்தியா உள்பட சுமார் 100க்கும் மேற்பட்ட நாடுகள் மீது கடுமையான வரிகளை விதித்தார்.

இதனிடையே, டிரம்பின் வரி விதிப்பு நடவடிக்கை சட்டவிரோதமானது என 3 கீழமை நீதி மன்றங்கள் தீர்ப்பு வழங்கியதை தொடர்ந்து, இந்த வழக்கை விசாரித்த அமெரிக்க உச்ச நீதிமன்றம், கடந்த பிப்ரவரியில் வெளிநாடுகள் மீதான பரஸ்பர வரிகளை ரத்து செய்து உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில் அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்பின் சுங்க வரி உத்திக்கு அமெரிக்க வர்த்தக கோர்ட்டு மேலும் ஒரு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

இதன்படி இந்தியா உள்ளிட்ட நாடுகள் மீது டிரம்ப் புதிதாக விதித்த 10 சதவீத உலகளாவிய வரிகள் சட்டவிரோதமானவை என்று அமெரிக்க வர்த்தக கோர்ட்டு அதிரடி தீர்ப்பு வழங்கி உள்ளது.

# ஏப்ரலில் 2.39 லட்சம் மின் வாகனங்கள் விற்பனை!

## கடந்த ஆண்டை விட 41% அதிகரிப்பு!

புதுடெல்லி, மே.10- இந்தியாவின் மின் வாகனத் துறை, நடப்பு 2026-27 நிதியாண்டை மிக வலுவான வளர்ச்சியுடன் தொடங்கியுள்ளது. கடந்த ஏப்ரல் மாத விற்பனையில் இதுவரை இல்லாத அளவாகப் 41 சதவீத புதிய உச்சத்தை மின் வாகன விற்பனைத் தொட்டுள்ளது.

இது குறித்து மத்திய அரசின் வாகன் இணையதள தரவுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: கடந்த ஏப்ரலில் இரு சக்கர, மூன்று சக்கர, பயணிகள் மற்றும் வர்த்தக வாகனங்கள் என அனைத்துப் பிரிவுகளையும் சேர்த்து மொத்தம் 2,39,025 மின்சார வாகனங்கள் விற்பனையாகி உள்ளன.

இது கடந்த 2025 ஏப்ரலில் விற்பனையான 1,69,360 வாகனங்களுடன் ஒப்பிடுகையில் 41 சதவீத வளர்ச்சியாகும். இந்திய மின்சார வாகனச் சந்தையில் இரு சக்கர வாகனப் பிரிவே பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளது. ஏப்ரல் மாதத்தில் மட்டும் 1,48,740 மின் ஸ்கூட்டர்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் விற்பனையாகி உள்ளன.

இது முந்தைய ஆண்டின் ஏப்ரல் மாத விற்பனையை விட (92,536 வாகனங்கள்) 61 சதவீதம் அதிகமாகும். மொத்த மின்சார வாகன விற்பனையில் இரு சக்கர வாகனங்களின் பங்கு மட்டும் 62 சதவீதமாக உள்ளது. இவ்வாறு தரவுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெட்ரோல் விலை உயர்வு குறித்த அச்சம் மற்றும் உலகளாவிய கச்சா எண்ணெய் விநியோக நெருக்கடி காரணமாக, வாடிக்கையாளர்கள் மின்சார வாகனங்களை நோக்கி அதிகம் ஈர்க்கப்படுவதாக இத்துறை வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

ஓலா எலக்ட்ரிக், டிவிஎஸ் மோட்டார், பஜாஜ் ஆட்டோ, ஏதர் எனர்ஜி மற்றும் ஹீரோ விடா ஆகிய 5 நிறுவனங்கள் மட்டுமே சந்தையில் 84 சதவீதப் பங்கைக் கொண்டுள்ளன. மூன்று சக்கர மின் வாகன விற்பனை கடந்த ஆண்டை விட 3 சதவீதம் அதிகரித்து 64,549 எண்ணிக்கையில் பதிவாகியுள்ளது. மொத்த 3 சக்கர வாகன விற்பனையில் மின்சார மாடல்கள் சுமார் 60 சதவீதப் பங்கைப் பிடித்துள்ளன.

இதன் மூலம் சிஎன்ஜி 3 சக்கர வாகனங்களின் ஆதிக்கத்தை இவை மெல்லக் குறைத்து வருகின்றன. மஹிந்திரா மற்றும் பஜாஜ் ஆட்டோ நிறுவனங்களுக்கு இடையே இப்பிரிவில் கடும் போட்டி நிலவுகிறது.

மின் கார்கள் 73% உயர்வு: பயணிகள் வாகனப் பிரிவில் (கார்கள், எஸ்யூவி) வியக்கத்தக்க வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. ஏப்ரலில் 23,265 மின்சாரக் கார்கள் விற்பனையாகி உள்ளன. இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 73 சதவீத வளர்ச்சியாகும். டாடா மோட்டார்ஸ் 8,500 வாகனங்களுடன் 37% சந்தைப் பங்கைப் பெற்று முதலிடத்தில் நீடிக்கிறது. சரக்கு மற்றும் போக்குவரத்து வாகனப் பிரிவில் 148 சதவீத அசுர வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. மொத்தம் 2,236 வாகனங்கள் விற்பனையாகி உள்ளன.

இதில் சிறிய ரகச் சரக்கு வாகனங்களின் பங்களிப்பு மட்டும் 81 சதவீதமாகும். மின்சாரப் பேருந்துகள் விற்பனையும் 23 சதவீதம் அதிகரித்துள்ளது. இப்பிரிவில் டாடா மோட்டார்ஸ் 36 சதவீத சந்தைப் பங்களிப்புடன் முன்னிலையில் உள்ளது. மஹிந்திரா & மஹிந்திரா 5,394 வாகனங்களுடன் ஜேஎஸ்டபிள்யூ, எம்.ஜி மோட்டார் நிறுவனத்தைப் பின்னுக்குத் தள்ளி 2-ம் இடத்தைப் பிடித்துள்ளது.

வடபழனி - திருமங்கலம் பகுதியில்

# மெட்ரோ ரயில் பணிகள் தாமதம்! மறுடெண்டர் கோர முடிவு!

## மெட்ரோ நிர்வாகம் தகவல்!

சென்னை, மே 10 - வடபழனி, திருமங்கலம் சந்திப்பு பகுதிகளில் மெட்ரோ ரயில் பணிகள் தாமதம் ஏற்பட்டுள்ளதால் மறு டெண்டர் கோர மெட்ரோ நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

'சென்னையில் முதற்கட்ட மெட்ரோ ரயில் சேவை, விம்கோ நகர் மற்றும் பரங்கிமலை முதல் சென்ட்ரல் என 2 வழித்தடங்களில் இயங்குகிறது. சென்னையின் வளர்ச்சி மற்றும் முக்கிய பகுதிகளை இணைக்கும் வகையில், 2ம் கட்ட மெட்ரோல் ரயில் திட்டம், 3வது வழித்தடத்தில் 116.1 கிலோ மீட்டர் தூரத்திற்கு ரூ. 63,246 கோடி மதிப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதாவது, மாதவரம் - சிறுசேரி வரை (45.4 கி.மீ.) 3வது வழித் தடத்திலும். கலங்கரை விளக்கம் பூந்தமல்லி வரை (26.1கி.மீ.) 4வது வழித்தடத்திலும், மாதவரம் சோழிங்கநல்லூர் வரை (44.6 கி.மீ) 5வது வழித்தடத் திலும் பணிகள் நடைபெறு கின்றன. இதில், மொத்தம் 118 மெட்ரோ ரயில் நிலையங்கள் அமைக்க திட்டமிட்டு, பணிகள் நடைபெறு கின்றன. இதில், சுமார் 42.6 கி.மீ. சுரங்கப்பாதையில் 43 சுரங்க ரயில் நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன.

இந்நிலையில், இந்த 2ம் கட்ட திட்டத்தில், சில குறிப்பிட்ட பகுதிகளில் பணிகள் தாமதமடைந்துள்ளன. குறிப்பாக, வடபழனி மற்றும் திருமங்கலம் ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய மேம்பாட்டு பணிகளுக்கான ஒப்பந்தப் புள்ளிகள், நிர்ணயிக்கப் பட்ட மதிப்பீட்டை விட மிக அதிகமாக கோரப்பட்டதே இந்த தொய்வுக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

மெட்ரோ ரயில் நிர்வாகம் குறிப்பிட்ட பணிகளுக்கான ஒரு குறிப்பிட்ட தொகையை மதிப்பீடாக நிர்ணயித்திருந்தது. ஆனால், இந்த பணிகளை செய்ய முன்வந்த கட்டுமான நிறுவனங்கள். மெட்ரோ நிர்வாகம் எதிர்பார்த்ததை விட மிக அதிகமான விலையை தங்கள் ஒப்பந்தப்புள்ளிகளில் குறிப்பிட்டுள்ளன. கட்டுமானப் பொருட்களின் விலை உயர்வு, தொழிலாளர் பற்றாக்குறை மற்றும் இடத்தின் நெரிசல் போன்ற காரணங்களால் நிறுவனங்கள் அதிக விலையை கோருவதாக தெரிகிறது.

நிர்ணயிக்கப்பட்ட பட்ஜெட்டை விட கூடுதல் நிதி தேவைப்படுவதால், இந்த பணிகளை அப்படியே தொடங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

**மிக முக்கியமான போக்குவரத்து மையங்கள்!**

வடபழனி மற்றும் திருமங்கலம் சந்திப்புகள் சென்னையின் மிக முக்கியமான போக்குவரத்து மையங்களாகும்.

இங்கு ஏற்கனவே முதற் கட்டமெட்ரோ தடம் பயன் பாட்டில் உள்ள நிலையில், 2ம் கட்ட திட்டத்திற்கான சில இணைப்பு பணிகள் மற்றும் ரயில் நிலைய மேம் பாட்டுப் பணிகள் நடை பெற வேண்டியுள்ளன. இங்குள்ள சுரங்கப் பாதை மற்றும் தரைவழிப் பணிகளுக்கான ஒப்பந்தங்களில் இழுபறி நீடிக்கிறது. விலை அதிகமாக கோரப்பட்டதால், மெட்ரோ நிர்வாகம் இந்த ஒப்பந்தப்புள்ளிகளை மறுபரிசீலனை செய்யவோ அல்லது மீண்டும் புதிய டெண்டர்களை விடவோ ஆலோசித்து வருகிறது. இதனால் திட்டமிடப்பட்ட காலக்கெடுவை விட சில மாதங்கள் பணிகள் தள்ளிப்போக வாய்ப்புள்ளது. திட்ட செலவு அதிகரிப்பதை தவிர்க்க மெட்ரோ ரயில் நிறுவனம் சில உத்திகளை கையாண்டு வருகிறது:

அதிக விலை கோரப்பட்ட டெண்டர்களை ரத்து செய்துவிட்டு, புதிய நிபந்தனைகளுடன் மீண்டும் டெண்டர் விடுவதன் மூலம் செலவைக் குறைக்க முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. ஏற்கனவே விண்ணப்பித்த நிறுவனங்களுடன் விலையைக் குறைக்க மெட்ரோ அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

**மெட்ரோ அதிகாரிகள் பேச்சுவார்த்தை !**

கட்டுமானச்செலவைக் குறைக்கும் வகையில் சிறிய அளவிலான தொழில்நுட்ப மாற்றங்களைச் செய்ய முடியுமா என்றும் பொறியாளர்கள் ஆய்வு செய்து வருகின்றனர்.

மெட்ரோ பணிகள் நடைபெறும் இடங்களில் ஏற்கனவே சாலைகள் சுருங்கிப் போயுள்ளதால், போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ளது. பணிகள் தாமதமாவதால்,இந்த நெரிசல் இன்னும் நீண்ட காலத்திற்கு நீடிக்கும் என்று வாகன ஓட்டிகள் கவலை தெரிவிக்கின்றனர். குறிப்பாக மழைக்காலம் தொடங்குவதற்குள் அடிப்படைப் பணிகளை முடிக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

**சிக்கல்கள் விரைவில் தீர்க்கப்படும்!**

இந்தத் தாமதம் ஒரு குறிப்பிட்ட பகுதிகளில் மட்டுமே என்பதால், ஒட்டுமொத்த மெட்ரோ 2ம் கட்ட திட்டமும் பாதிக்கப்படாது என்று அதிகாரிகள் தரப்பில் உறுதியளிக்கப்பட்டுள்ளது. பூந்தமல்லி. போரூர் போன்ற மற்ற வழித்தடங்களில் பணிகள் மிக வேகமாக நடைபெற்று வருகின்றன. குறிப்பிட்ட இந்த 2 இடங்களில் நிலவும் நிதி தொடர்பான சிக்கல்கள் விரைவில் தீர்க்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பொதுமக்களின் வரிப்பணம் வீணாகாமல் இருக்க முறையான விலையில் தரமான கட்டுமானத்தை உறுதி செய்வது ஒரு நிர்வாகத்தின் கடமையாகும். அந்த வகையில், அதிக விலைகோரப்பட்ட ஒப்பந்தங்களை மெட்ரோ நிர்வாகம் நிராகரிப்பது சரியான முடிவாகவே பார்க்கப்படுகிறது. சிறிய அளவிலான இந்த தாமதங்களை கடந்து, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் தனது பணிகளைச் சீராக முடிக்கும் பட்சத்தில், அது நகரின் வளர்ச்சிக்கு மிகப்பெரிய ஊக்கமாக அமையும், என சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

# இந்தியர்களைக் கவரும் தாய்லாந்து 'டெஸ்டினேஷன்' விசா!

## தொடர்ந்து 180 நாட்கள் தங்கலாம்! 5 ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும்!

பாங்காக், மே 10- பல ஆண்டுகளாக நீண்ட விடுமுறை, ரிமோட் ஒர்க், ஆரோக்கியம் சார்ந்த தங்குமிடங்கள் மற்றும் பேக்பேக்கிங் சாகசங்களுக்குத் தாய்லாந்து மிகவும் பிரபலமான நாடுகளில் ஒன்றாக இருந்து வருகிறது.

இப்போது, நவீன காலப் பயணிகளுக்காகவே வடிவமைக்கப்பட்டது போன்ற ஒரு விசா மூலம், அந்த நாடு தனது நற்பெயரை இன்னும் வலுவாக முன்னெடுத்துச் செல்கிறது. 'டெஸ்டினேஷன் தாய்லாந்து விசா' என்று அழைக்கப்படும் இது சுமார் ரூ.25 ஆயிரத்துக்கு கிடைக்கிறது.

இந்த 5 ஆண்டு கால மல்டிபிள்என்ட்ரி விசா, ஃப்ரீலான்ஸர்கள், ரிமோட் பணியாளர்கள், தாய் சமையல் வகுப்புகள், ஆரோக்கியத் திட்டங்கள் அல்லது கலாச்சாரக் கற்றல் போன்ற செயல்பாடுகளுக்காக தாய்லாந்து செல்லும் நபர்களை இலக்காகக் கொண்டுள்ளது. எளிமையான சொற்களில் கூறுவதென்றால், நீண்ட காலம் தங்கி உள்ளூர் அளவில் செலவு செய்து, வழக்கமான சுற்றுலாப் பயணங்களைத் தாண்டி அந்த நாட்டை அனுபவிக்க விரும்பும் மக்களை ஈர்ப்பதற்கான தாய்லாந்தின் முயற்சிதான் இது.

தென் கிழக்கு ஆசியாவில் நீண்ட காலத் தங்குமிடம், எங்கிருந்து வேண்டுமானாலும் வேலை செய்யும் வாழ்க்கை முறை மற்றும் மலிவான வாழ்க்கைச் செலவு ஆகியவற்றைத் தேடும் இந்தியர்களிடையே, இந்த விசா தற்போது இணையத்தில் ஒரு முக்கிய பேசுபொருளாக மாறி வருகிறது. டெஸ்டினேஷன் தாய்லாந்து விசா என்பது ஒரு நீண்ட கால மல்டிபிள்என்ட்ரி விசா ஆகும். இது தகுதியுள்ள வெளிநாட்டினர் 5 ஆண்டுகள் வரை தாய்லாந்தில் தங்க அனுமதிக்கிறது.

சாதாரண சுற்றுலா விசா போல் அல்லாமல், இது ஒரு குறுகிய கால விடுமுறைக்காக மட்டும் வருபவர்களுக்காக உருவாக்கப்பட்டது அல்ல. ரிமோட் முறையில் வேலை செய்யும் போது அல்லது ஒரு திறமையைக் கற்றுக் கொள்ளும் போது அல்லது தாய்லாந்து "சாஃப்ட் பவர்" செயல்பாடுகள் என்று அழைக்கப்படும் பயிற்சிகளில் ஈடுபடும் போது, நீண்ட காலம் அங்கு வசிக்க விரும்பும் புபவர்களுக்காக இது உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த விசா பயணிகளின் ஒவ்வொரு வருகையின் போதும் 180 நாட்கள் வரை தாய்லாந்தில் தங்க அனுமதிக்கிறது. அந்தத் தங்குமிடத்தை மேலும் 180 நாட்களுக்கு நீட்டிக்கவும் முடியும், அதாவது ஒரு வருகையை கிட்டத்தட்ட ஒரு வருடம் வரை நீடிக்க வாய்ப்புள்ளது.

உலக அளவில் முதலிடம்:

# சென்னை மெட்ரோவிற்கு 'சுற்றுச்சூழல் தலைமைத்துவ' விருது!

சென்னை, மே 10- சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், 2026 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய சுற்றுச்சூழல் சிறப்பு விருதுகள் நிகழ்வில், சிறந்த சுற்றுச்சூழல் தலைமைத்துவமிக்க திட்டத்திற்கான விருதினை வென்றுள்ளது.

போக்குவரத்துத் துறையில் மெட்ரோ ரயில் பிரிவின்கீழ் சென்னை மெட்ரோ செய்துள்ள அரிய சாதனைகளைப் பாராட்டி இந்த உயரிய கௌரவம் வழங்கப்பட்டுள்ளது. வரும் மே 22 ஆம் தேதி புதுடெல்லியில் நடைபெறவுள்ள உலகளாவிய எரிசக்தித் தலைவர்கள் உச்சி மாநாட்டில் இந்த விருது அதிகாரப்பூர்வமாக வழங்கப்பட உள்ளது.

மெட்ரோ ரயில் திட்டமிடல், கட்டுமானம் மற்றும் அதனை இயக்கும் முறைகளில் சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டதற்காக இந்த அங்கீகாரம் கிடைத்துள்ளது. பசுமைப் பகுதிகளைப் பாதுகாப்பதற்காக வழித்தடங்களை மாற்றியமைத்து மற்றும் கட்டுமானங்களில் நவீனப் பசுமை வடிவமைப்பு முறைகளைப் புகுத்தியதில் சென்னை மெட்ரோ முன்னோடியாகத் திகழ்கிறது.

ஒரு மிகப்பெரிய உள்கட்டமைப்புத் திட்டம் எவ்வாறு இயற்கை வளங்களைப் பாதுகாப்பதோடு மரக்கன்றுகள் நடுவதிலும் தீவிரம் காட்ட முடியும் என்பதை இது நிரூபித்துக் காட்டியுள்ளது.

சென்னையைப் பசுமையாகவும் வலிமையாகவும் மாற்றுவதற்கான தொலைநோக்குப் பார்வையில் மெட்ரோ நிர்வாகம் தொடர்ந்து அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகிறது. காலநிலை மாற்றத்திற்குத் தகுந்தாற்போல் கட்டுமானங்களை அமைப்பதிலும், சுற்றுச்சூழல் பாதுகாப்பை உறுதி செய்வதிலும் சர்வதேச அளவில் சென்னை மெட்ரோ கவனம் ஈர்த்துள்ளது. இந்த உலகளாவிய அங்கீகாரம் நிலையான போக்குவரத்து சேவையை வழங்குவதில் சென்னை மெட்ரோவிற்கு மேலும் ஒரு மகுடமாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

குற்றாலம் மெயின் அருவி பாறைச் சிற்பங்கள் சேதம்!

# புதிய ஆர்ச் கட்டுமானப் பணிக்கு ஐகோர்ட் தடை!

மதுரை, மே 10- குற்றாலம் மெயின் அருவிப் பகுதியில் பாறை சிற்பங்கள் சேதப்படுத்தப்பட்டதால், அங்கு நடந்து வரும் கட்டுமானப் பணிகளுக்கு உயர் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

மதுரையைச் சேர்ந்த ராம ரவிக்குமார், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு: குற்றாலம் மெயின் அருவி பகுதியில் புதிய ஆர்ச் கட்டுமான பணியின்போது பாறையில் செதுக்கப்பட்டிருந்த பழமையான சிவலிங்க சிலைகள் சேதமடைந்துள்ளது.

குற்றாலநாதர் கோயில் அருகே அமைந்துள்ள இந்த அருவி, ஆன்மிகத் தலமாகவும், முக்கிய சுற்றுலா மையமாகவும் உள்ளது. சிவன் நடனமாடிய ஐந்து சபைகளில் ஒன்றான சித்திர சபை குற்றாலத்தில் அமைந்துள்ளது.

மெயின் அருவியின் அடிப்பகுதியில் பல சிவலிங்கங்கள் பாறையில் செதுக்கப்பட்டுள்ளன. அருவியில் வரும் மூலிகைத் தண்ணீரால் இயற்கை அபிஷேகம் நடைபெறுகிறது. பயணிகள் பாதுகாப்புக்காக முன்பு பெரிய சிமென்ட் ஆர்ச் அமைக்கப்பட்டிருந்தது. அருவியின் நீர்வரத்தை கட்டுப்படுத்தவும் அந்த ஆர்ச் பயன்பட்டது.

தற்போது சீசன் முன்னிட்டு பழைய ஆர்ச்சை இடித்து புதியது அமைக்கும் பணி நடக்கிறது. இந்த பணிகளின்போது பயன்படுத்தப்படும் இயந்திரங்கள் மற்றும் இரும்புப் பொருட்கள் காரணமாக சிலைகள் சேதமடைந்தது. இந்த சிலைகளை இந்தியாவின் பொக்கிஷங்களாக பாதுகாக்கப்பட வேண்டும். முறையான உத்தரவு இல்லாமல் அவற்றை அழிக்கவோ, மாற்றம் செய்யவோ, வேறு இடத்துக்கு மாற்றவோ கூடாது.

அருவியில் அமைந்துள்ள விநாயகர் திருவுருவம் மற்றும் சிவலிங்க திருவுருவம் பிரதிஷ்டை செய்யப்பட்ட இடத்திலிருந்து வேறு இடத்துக்கு மாற்றியுள்ளனர். இந்த உருவங்களை பின்னாளில் மக்களின் கவனத்தை திசை திருப்பி வெளிநாடுகளுக்கு கடத்தப்படவும் வாய்ப்புள்ளது.

எனவே, குற்றாலம் மெயின் அருவி பகுதியில் பழங்கால சிலைகளை சேதப்படுத்தியவர்கள் மீது வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்கவும், அந்த சிலைகளை மீண்டும் அதே இடத்தில் அமைக்கவும் உத்தரவிட வேண்டும் என்று மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனுவை நீதிபதிகள் வேல்முருகன், குமரப்பன் அமர்வு இன்று விசாரித்தது. அரசு தரப்பில், 'சிற்பங்களை சிதைக்காமல் குற்றாலம் பிரதான அருவி பகுதியில் கட்டுமானங்களை மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும்' என கோரிக்கை விடுத்தார்.

பின்னர் நீதிபதிகள், 'சுற்றுலாவை மேம்படுத்த வேண்டும் என்பதற்காக, 2000ம் ஆண்டு பழமையான பாறை சிற்பங்களை சிதைத்தது ஏன்? பழமையான நினைவுச் சின்னங்களை முதலில் பாதுகாக்க வேண்டும். அதற்குப் பிறகு தான் சுற்றுலா வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். சிற்பங்களை சேதப்படுத்தாமல் பாதுகாக்க வேண்டும்.

குற்றாலம் அருவியில் குளிக்க வரும் பயணிகளுக்கு அளிக்கும் முக்கியத்துவத்தை அங்குள்ள பாறை சிற்பங்களை பாதுகாக்க ஏன் கொடுக்கவில்லை?

மறு உத்தரவு வரும் வரை குற்றாலம் மெயின் அருவியில் எந்தவிதமான கட்டுமான பணிகளும் மேற் கொள்ளக் கூடாது. சிற்பங்களை சிதைக்க கூடாது. விசாரணை ஜூன் மாதத்துக்கு தள்ளி வைக்கப்படுகிறது' என உத்தரவிட்டனர்.

# திபெத்தில் நிலநடுக்கம் ரிக்டர் அளவு 4.1 ஆக பதிவு!

## காஷ்மீரில் நில அதிர்வு!

புதுதில்லி, மே 10- திபெத்தில் நேற்று முன்தினம் அதிகாலை 4.1 அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக தேசிய நில அதிர்வு ஆய்வு மையம் (NCS) தெரிவித்துள்ளது....

இந்நிலையில் நில அதிர்வு இந்திய நேரப்படி அதிகாலை 3.10 மணிக்கு சுமார் 38 கி.மீ ஆழத்தில் ஏற்பட்டுள்ளது.

அட்சரேகை: 35.385 வடக்கு, தீர்க்கரேகை: 85.112 கிழக்கு, ஆழம்: 38 கி.மீ தூரம் வரை ஏற்பட்டுள்ளதாக தேசிய நில அதிர்வு ஆய்வு மையம் குறிப்பிட்டுள்ளது....

இந்த நிலநடுக்கத்தால் பொருட்சேதமோ அல்லது உயிர் சேதமோ ஏற்பட்டதாக தகவலும் வெளியிடவில்லை.

அதேபோல நேற்று முன்தினம் காலை 9.57 மணியளவில் 3.5 ரிக்டர் அளவில் காஷ்மீரின் கிஸ்த்வார் மாவட்டத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது பூமிக்கு 10 கிலோமீட்டர் ஆழத்தில் ஏற்பட்டுள்ளது. இதனால் அங்கு லேசான நிலஅதிர்வு உணரப் பட்டது.

புவி தட்டு மோதல்களால் ஏற்படும் அதிர்வுகளில் திபெத்தும் நேபாளமும் முக்கிய பிளவு கோட்டில் அமைந்துள்ளதிலையில் அங்கு இந்திய யூரேசிய தட்டுடன் இணைகின்ற சூழல் நிலவுவதால் அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படுவதாக கண்டறியப்பட்டது.

இமயமலை சிகரங்களின் உயரங்களை மாற்றும் அளவுக்கு வலுவாக மாறக்கூடிய புவித்தட்டு உயர்வினால் இது போன்ற பகுதிகளில் அதிக பாதிப்பு ஏற்படுகிறது.

ஆழமான நிலநடுக்கத்தை விட ஆழமற்ற நிலநடுக்கம் மிகவும் அதிக ஆபத்தானவை. ஏனெனில் ஆழமற்ற நிலநடுக்கங்களின் நில அதிர்வு அலைகள் தரைக்கு குறைந்த தூரமே பயணிப்பதால், அவை வலுவான நிலவியலும் அதிக கட்டமைப்பு சேதம் மற்றும் உயிரிழப்புகளுக்கும் வழிவகுக்கின்றன.

திபெத்தில் 8.0 அல்லது அதற்கு இணையான ரிக்டர் அளவு கொண்ட மிகப்பெரிய நிலநடுக்கங்கள், பக்கவாட்டு நகர்வுப் பிளவுகளில் ஏற்படுகின்றன. செங்குத்துப் பிளவு நிலநடுக்கங்கள் ரிக்டர் அளவில் சிறியவை; 2008ஆம் ஆண்டில், பீடபூமி முழுவதும் 5.9 முதல் 7.1 வரையிலான ரிக்டர் அளவு கொண்ட ஐந்து செங்குத்துப் பிளவு நிலநடுக்கங்கள் ஏற்பட்டன.

# ஐக்கிய அரபு அமீரகத்தின் மீது ட்ரோன் மற்றும் ஏவுகணைத் தாக்குதல்!

ஈரான், மே 10- ஐக்கிய அரபு அமீரகத்தின் மீது மீண்டும் ட்ரோன் மற்றும் ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு அமீரகத்தின் முக்கிய நகரங்களைக் குறிவைத்து வெள்ளிக்கிழமை (மே 8) பிற்பகல் வீசப்பட்ட ஏவுகணைகளையும் ட்ரோன்களை அந்நாட்டு பாதுகாப்புப் படைகள் தகர்த்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலுக்கு ஈரான் பொறுப்பேற்காத நிலையில், தாக்குதலால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்தும் இதுவரை எந்தவொரு தகவலும் வெளியாக வில்லை.

இந்த நிலையில், நேற்று முன்தினம் காலை ஹோர்முஸ் நீரிணையின் அருகில் உள்ள அமெரிக்க கடற்படையின் கப்பல்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்குப் பதிலடியாக ஈரானிய ராணுவத்தின் கட்டமைப்புகள் மீது தாக்குதல் நடத்தியதாக, அமெரிக்க படைகள் அறிவித்துள்ளன.

முன்னதாக, அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கு எதிரான போரில் ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்ட வளைகுடா நாடுகளில் அமைந்துள்ள முக்கிய கட்டமைப்புகள் மீது ஈரானிய படைகள் தாக்குதல் நடத்தி வந்தன.

இதையடுத்து, அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்பின் போர்நிறுத்த அறிவிப்பின்படி இருதரப்பும் தங்களது தாக்குதல்களை நிறுத்தின.